பிலவ ஆண்டு (ஐப்பசி 22 ) 2021 நவம்பர் 08 தேதி திங்கள்கிழமை
முற்பகல் 11.00 மணிக்கு
திருவாரூர் நகர்மன்ற அவசரக்கூட்டம் நடைபெறும் அப்பொழுது
கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்
முன்னிலை: திரு.சு.பிரபாகரன்ஆணையர் மற்றும் தனி அலுவலர்

<table>
<tr><th>பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம்</th><th>தீர்மான எண்</th></tr>
<tr><td>பொருள் எண் 01<br>கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2021-22ன் கீழ் திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தின் அருகாமையில் போட்டி தேர்வுகளுக்கு தயார் ஆகும் மற்றும் வேலை தேடும் இளைஞர்களுக்கு ஏதுவாக நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.197.54 இலட்சத்திற்கு அரசாணை (நிலை)எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.10.2021ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>அதன்படி நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்க தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கான மதிப்பீடு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2594/2021/இ1</td><td>288) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண் 02<br>கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2021-22ன் கீழ் திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மண் சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக மாற்றி (சாலையின் நீளம் - 4.744 கி.மீ) அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.413.94 இலட்சத்திற்கு அரசாணை (நிலை)எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.10.2021ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>அதன்படி திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மண் சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக மாற்றி (சாலையின் நீளம் - 4.744 கி.மீ) அமைக்கும் பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கான மதிப்பீடு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2594/2021/இ1</td><td>289) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண் 03<br>தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2021-22ன் கீழ் திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயற்கை இடர்பாடுகளாலும், குடிநீர் மற்றும் பாதாளச்சாக்கடை வீட்டு இணைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டதாலும் பழுதடைந்த சாலைகளை மேம்படுத்தும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.1000.00 இலட்சத்திற்கு அரசாணை (நிலை)எண். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். . .2021ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>அதன்படி திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பழுதடைந்த நிலையில் உள்ள சாலைகளை மேம்படுத்தும் பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கான மதிப்பீடு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2951/2021/இ1</td><td>290) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண் 04<br>திருவாரூர் நகராட்சிக்கு 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2021-22ன் கீழ் குடிநீர் மற்றும் திடக்கழிவு மேலாண்மையின் பராமரித்தல் பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து கீழ்கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணிகளின் விபரம்</th><th>மதிப்பீடு ரூ. இலட்சத்தில்</th></tr>
<tr><td colspan="3">Tied Grant</td></tr>
<tr><td>1</td><td>மடப்புரம் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வளாகத்தில் 40KVA ஜெனரேட்டர் விநியோகம் மற்றும் பொருத்தும் பணி.</td><td>8.00</td></tr>
<tr><td>2.</td><td>நராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சிறுமின்விசைப்பம்புகளை பராமரிப்பு செய்யும் பணி.</td><td>15.00</td></tr>
<tr><td>3.</td><td>நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது குடிநீர் குழாய்கள், இந்தியா மார்க் II பம்புகள் அமைவிடத்திற்கு பிளாட்பார்ம் அமைத்தம்.</td><td>5.00</td></tr>
</table></td><td>291) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 4. | திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு LCV வாகனங்கள் இரண்டு எண்ணிக்கைகள் புதிதாக வாங்குதல். | 17.00 | |
| 5. | நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள பாதாளச்சாக்கடை ஆழ்நுழை தொட்டியினை உயர்த்துதல் மற்றும் பழுதடைந்த நிலையில் ஆழ்நுழை தொட்டிகளை புனரமைப்பு செய்தல் மற்றும் புதிய மூடிகள் மாற்றுதல். | 15.00 | |
| 6. | நகராட்சிக்கு சொந்தமான ஜுப்ளி மார்க்கெட் அருகாமையில் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் அமைக்கும் பணி. | 45.00 | |
| | **மொத்தம்** | **105.00** | |
| | **Untied Grant** | | |
| | நிலுவையில் உள்ள மின்வாரியக் கட்டணங்கள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கு செலுத்தவேண்டிய குடிநீர் கட்டணங்கள். | 68.00 | |
| | **மொத்தம்** | **68.00** | |
| | **ஆகமொத்தம்** | **173.00** | |

மேற்காணும் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மானியத்தொகை போக மீதத்தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.3285/2020/இ1

பொருள் எண் 05

292) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

மூலதன மானிய நிதி 2021-22ன் கீழ் திருவாரூர் நகராட்சி பழைய பேருந்து நிலைய பகுதியில் உள்ள பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள கட்டண கழிப்பிடம் மற்றும் பொது கழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதியதாக கழிவறை கட்டும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.40.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலையத்தில் பழுதடைந்த நிலையில் உள்ள கழிவறைகளை இடித்துவிட்டு புதியதாக கழிவறைகள் கட்டும் பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கான மதிப்பீடு நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர், தஞ்சாவூர் அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.**2839/2021**/இ1

பொருள் எண் 06

293) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

திருவாரூர் நகராட்சிக்கு 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2020-21ன் கீழ் 2வது தவணையாக குடிநீர் மற்றும் திடக்கழிவு மேலாண்மையின் பராமரித்தல் பணிகளை மேற்கொள்ள மானிய தொகை ரூ.82.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து தேர்வு செய்யப்பட்ட ஐந்து பணிகளுக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.224 நாள்.30.07.2021ல் அனுமதி வழங்கப்பட்டது. மேலும் குடிநீர், திடக்கழிவு மேலாண்மை மற்றும் பாதாளசாக்கடை பராமரித்தல் பணிகளை மேற்கொள்ள திருத்திய மதிப்பீட்டில் பணிகள் தேர்வுசெய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீர்உந்து நிலையம், கீழ்நிலைத்தொட்டி, மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மற்றும் சிறு மின்விசைப்பம்பு மோட்டார்கள் விநியோகம் செய்யும் பணி. | 10.00 |
| 3. | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பாதாளசாக்கடை உந்து நிலையங்களில் 3HP நீர் மூழ்கி மின்மோட்டார்கள் விநியோகம் செய்யும் பணி. | 8.00 |
| 4. | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பாதாளசாக்கடை உந்து நிலையங்களில் 4HP நீர் மூழ்கி மின்மோட்டார்கள் விநியோகம் செய்யும் பணி. | 9.00 |
| 5. | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பாதாளசாக்கடை உந்து நிலையங்களில் 7HP நீர் மூழ்கி மின்மோட்டார்கள் விநியோகம் செய்யும் பணி. | 13.00 |

| | | |
|---|---|---|
| 6. | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பாதாளசாக்கடை உந்து நிலையங்களில் 10HP நீர் மூழ்கி மின்மோட்டார்கள் விநியோகம் செய்யும் பணி. | 14.00 |
| 7. | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பாதாளசாக்கடை உந்து நிலையங்களில் 25HP நீர் மூழ்கி மின்மோட்டார்கள் விநியோகம் செய்யும் பணி. | 11.00 |
| 8. | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட திருமஞ்சனவீதி மற்றும் கேக்கரையில் அமைந்துள்ள பாதாளசாக்கடை கழிவுநீரேற்று நிலையங்களில் 30HP மற்றும் 50HP நீரில் மூழ்காத மின்மோட்டார்கள் விநியோகம் செய்யும் பணி. | 18.00 |
| | **மொத்தம்** | **83.00** |

மேற்காணும் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மானியத்தொகை போக மீதத்தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.3285/2020/இ1

பொருள் எண் 07

திருவாரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகள் அகற்ற பயன்படுத்தும் வாகனம் எண். TN50-M–5068 ஆட்டோவிற்கு பழுதுகள் சரி செய்வதற்கு அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் ஆட்டோ கேரேஜ் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| **வ.எண்** | வாகனம் எண். | **விபரம்** | **தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ் (Rs.)** | **அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ் (Rs.)** | **கஜராஜ் & கம்பெனி (Rs.)** |
|---|---|---|---|---|---|
| 1 | TN50 M – 5068 | பழுதுகள் சரி செய்தல் | 165422/- | 168150/- | 170450/- |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. **தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ், திருவாரூர்** என்ற நிறுவனத்திடம் பழுதுகள் சரி செய்து கொள்ளவும் அதற்குரிய பில்பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

. **அலுவலக குறிப்பு :-** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று M/s. **தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ், திருவாரூர்** என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கவும் மேலும் மேற்கண்ட நிறுவனத்தின் பில்பட்டியல் படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 2526/2021/எச்1**

294) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 08

திருவாரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகள் அகற்ற பயன்படுத்தும் வாகனம் எண். TN50-E-2361 மினிலாரிக்கு பழுதுகள் சரி செய்வதற்கு அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் ஆட்டோ கேரேஜ் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| **வ.எண்** | வாகனம் எண். | **விபரம்** | **தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ் (Rs.)** | **அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ் (Rs.)** | **கஜராஜ் & கம்பெனி (Rs.)** |
|---|---|---|---|---|---|
| 1 | TN50-E-2361 | பழுதுகள் சரி செய்தல் | 196220/- | 204350/- | 209850/- |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. **தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ், திருவாரூர்** என்ற நிறுவனத்திடம் பழுதுகள் சரி செய்து கொள்ளவும் அதற்குரிய பில்பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. .

**அலுவலக குறிப்பு :-** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று M/s. **தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ், திருவாரூர்** என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கவும் மேலும்

295) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

மேற்கண்ட நிறுவனத்தின் பில்பட்டியல் படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 2936/2021/எச்1**

பொருள் எண் 09

திருவாரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகள் அகற்ற பயன்படுத்தும் வாகனம் எண். TN50-1267 டிராக்டரின் பழுதுகள் சரி செய்வதற்கு அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் ஆட்டோ கேரேஜ் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| **வ.எண்** | வாகனம் எண். | **விபரம்** | **தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ் (Rs.)** | **அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ் (Rs.)** | **கஜராஜ் & கம்பெனி (Rs.)** |
|---|---|---|---|---|---|
| 1 | TN50-1267 | பழுதுகள் சரி செய்தல் | 164416/- | 170100/- | 167350/- |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. **தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ், திருவாரூர்** என்ற நிறுவனத்திடம் பழுதுகள் சரி செய்து கொள்ளவும் அதற்குரிய பில்பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. .

**அலுவலக குறிப்பு : -** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று M/s. **தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ், திருவாரூர்** என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கவும் மேலும் மேற்கண்ட நிறுவனத்தின் பில்பட்டியல் படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 2795/2021/எச்1**

296) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 10

இந்நகராட்சிக்குட்பட்ட பனகல் சாலை பழைய பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் பணியாற்றி வருகின்ற கமலாம்பாள் மகளிர் சுய உதவிக்குழு பணியாளர்களின் தின ஊதியத்தை ரூ.250/- லிருந்து ரூ.325/-ஆக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. (அரசாணை எண் 4D No.2 நாள் 26.02.2021) –ன் படி அம்மா உணவக பணியாளர்களுக்கு ஊதியத்தை உயர்த்தி வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 1222/2018/பி2

297) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 11

திருவாரூர் நகராட்சி சுமார் 10.47 சதுர கி.மீ பரப்பளவில், 30 வார்டுகளுடன், சுமார் 23312 குடியிருப்புகளும், மற்றும் 69000 மக்கள் தொகையும் கொண்ட முதல் நிலை நகராட்சியாகும்.

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 373 சாலைகள், தெருக்கள் உள்ளன. இந்நகராட்சியின் சாலைகளின் மொத்த நீளம் 101.548 கி.மீ ஆகும். மழைநீர் வடிகால் 65.00 கி.மீ பராமரிக்கப்படுகிறது.

நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி 13.20 மெட்ரிக் டன் மக்கும் குப்பையும் 8.80 மெட்ரிக் டன் மக்காத குப்பையும் ஆக மொத்தம் 22 மெட்ரிக் டன் குப்பைகள் உற்பத்தியாகிறது. வீடுவீடாக குப்பைகள் தரம் பிரித்து வாங்கப்படுகிறது. அதனால் பொது சுகாதாரப்பிரில் பொது சுகாதாரம் மற்றும் தூய்மைப்பணி மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாத நிலை உள்ளது.

மேலும், இந்நகராட்சியின் 4 உள்ளூர் ஆதாரங்கள் மூலமாக 2.32 எம்.எல்.டி, 108 சிறுவிசை மின்துளை கிணறு மூலம் 0.60 எம்எல்டி, 140 ஆழ்துளை கிணறு (கைபம்பு)களின் மூலம் 0.45 எம்எல்டி, மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியத்தின் மூலம் 1.90 எம்எல்டி சேர்த்து ஆகமொத்தம் 5.27 எம்எல்டி குடிநீர் 5 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளின் மூலம் நபர் ஒன்றுக்கு 90 எல்பிசிடி பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் தினமும் 2 மணி நேரம் வழங்கப்பட்டுவருகிறது.

மேலும் இந்நகராட்சியின் பாதாளச்சாக்கடைத்திட்டப் பணிகள் 2006ம் ஆண்டு 2014ல் பணி முழுமையாக TWAD Board மூலம் முடிக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. இந்நகர்பகுதியில் பாதாளச்சாக்கடை கழிவுநீர் குழாய் 67.642 கி.மீ பதிக்கப்பட்டுள்ளது. அதில் 2445 எண்ணிக்கைகள் ஆழ்நுளை தொட்டி அமைக்கப்பட்டு 5 கழிவுநீரேற்று நிலையங்களும் மற்றும் 15 உந்து நிலையங்களும் உள்ளது. இந்நகராட்சியில் பாதாளச்சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் 6.92 MLD கொள்ளளவு கொண்டதாகும். தினசரி சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரானது அருகாமையில் உள்ள சுக்கனாற்றில் பாசனத்திற்க விடப்படுகிறது-

எனவே நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண் 21787/2021/EA-2 நாள் 02,10.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ள அளவு கோலின் படி பொது சுகாதாரம் மற்றும் தூய்மைப்பணி மேற்கொள்ளவும் குடிநீர் வழங்கல் பராமரிப்பு பணிகளுக்கும், பாதாள சாக்கடை கழிவு நீர் பணிகளுக்கும் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு தற்போது உள்ள நிரந்தர பணியாளர்களை தவிர்த்து தேவைப்டும் கூடுதல் பணியாளர்களை தனியார் மூலம்

298) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தவும் அதற்கான செலவினங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கிடவும் முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

பொது சுகாதாரப் பணியாளர்கள்

| வ. எண் | விபரம் | தூய்மை பணியாளர் | ஓட்டுநர் | துப்புரவு பணி மேற்பார்வையாளர் |
|---|---|---|---|---|
| 1. | தேவைப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை | 168 | 22 | 15 |
| 2. | தற்போது உள்ள நிரந்தர பணியாளர்கள் எண்ணிக்கை | 62 | 8 | 5 |
| 3. | இடைவெளி (Gap) | 106 | 14 | 10 |
| 4. | அனுமதிக்கப்படும் பணியாளர்கள் | 106 | 11 | 10 |
| 5. | நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் | 461.00 | 708.00 | 562.00 |

| | |
|---|---|
| மொத்த அடிப்படை செலவு | 224.76 இலட்சம் |
| மொத்த மதிப்பீட்டு செலவு (GST, EPF, ESI, EPF admin EDLI and Agency Charges) | 266.36 இலட்சம் |

**குடிநீர் விநியோகப் பணியாளர்கள்**

| வ.எண் | விபரம் | பராமரிப்பு பணியாளர் (Maintenance Worker) |
|---|---|---|
| 1. | தேவைப்படும் பணியாளர்கள் | 15 |
| 2. | தற்போது உள்ள நிரந்தர பணியாளர்கள் எண்ணிக்கை | - |
| 3. | இடைவெளி (Gap) | 15 |
| 4. | அனுமதிக்கப்படும் பணியாளர்கள் | 15 |

5. நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விபரம்:

| வ. எண் | தேவைப்படும் பணியாளர்கள் விபரம் | எண்ணிக்கை | நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|
| 1. | மின்கண்காணிப்பாளர் -1 | 1 | 945 |
| 2. | மின்னாளர் -1 (சி – சான்று) | 1 | 712 |
| 3. | மின்னாளர் – 2 (பி – சான்று) | 2 | 708 |
| 4. | பராமரிப்பு பணியாளர்கள் – 11 | 11 | 581 |
| | **ஆகமொத்தம்** | **15** | |

| | |
|---|---|
| மொத்த அடிப்படை செலவு | 30.67 இலட்சம் |
| மொத்த மதிப்பீட்டு செலவு (GST, EPF, ESI, EPF admin EDLI and Agency Charges) | 36.35 இலட்சம் |

**பாதாளச்சாக்கடை கழிவுநீர் பணியாளர்கள்**

| வ.எண் | விபரம் | பராமரிப்பு பணியாளர் (Maintenance Worker) |
|---|---|---|
| 1. | தேவைப்படும் பணியாளர்கள் | 67 |
| 2. | தற்போது உள்ள நிரந்தர பணியாளர்கள் எண்ணிக்கை | - |
| 3. | இடைவெளி (Gap) | 67 |
| 4. | அனுமதிக்கப்படும் பணியாளர்கள் | 67 |

5. நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விபரம்:

| வ. எண் | தேவைப்படும் பணியாளர்கள் விபரம் | எண்ணிக்கை | நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|
| 1. | சுத்திகரிப்பு நிலைய பொறியாளர் | 1 | 1049 |
| 2. | மின் கண்காணிப்பாளர் | 1 | 945 |
| 3. | மின்னாளர் (சி – சான்று) | 5 | 712 |
| 4. | மின்னாளர் (பி – | 10 | 708 |

| | | | |
|---|---|---|---|
| | சான்று) | | |
| 5. | பராமரிப்பு பணியாளர்கள் | 36 | 520.65 |
| 6. | ஆய்வக உதவியாளர் | 1 | 654 |
| 7. | வேதியியலாளர் | 1 | 714 |
| 8. | புதைவடிகால் ஆய்வர் | 1 | 571 |
| 9. | புதைவடிகால் சுத்தம் செய்பவர் | 7 | 498.42 |
| 10. | புதைவடிகால் பணியாளர் | 2 | 498842 |
| 11. | ஓட்டுநர் | 1 | 708 |
| 12. | துலக்குநர் | 1 | 396 |
| | ஆகமொத்தம் | 67 | |

| | |
|---|---|
| மொத்த அடிப்படை செலவு | 140.00 இலட்சம் |
| மொத்த மதிப்பீட்டு செலவு (GST, EPF, ESI, EPF admin EDLI and Agency Charges) | 165.99 இலட்சம் |

அலுவலக குறிப்பு :-

1. பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளுக்கு நிரந்தர பணியாளர்களை தவிர்த்து தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்திக்கொள்ள ஆகும் செலவினம் ஒரு வருடத்திற்க ரூ.266.36 இலட்சம் மற்றும் உபகரணங்கள் செலவு ரூ.10.00 இலட்சமும் சேர்த்து ரூ.276.36 இலட்சத்திற்கும் பொறியியல் பிரிவில் குடிநீர் பணிகளுக்கு நிரந்தர பணியாளர்களை தவிர்த்து தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்திக்கொள்ள ஆகும் செலவினம் ஒரு வருடத்திற்குச ரூ.36.35 இலட்சத்திற்கும் மற்றும் பாதாளச்சாக்கடை கழிவுநீர் நிரந்தர பணியாளர்களுக்கு இடஒதுக்கீடு இல்லாத காரணத்தினால் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமைத்துகொள்ள ஆகும் செலவினம் ஒரு வருடத்திற்கு ரூ.165.99 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி கோரும் கருத்துருக்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பிட ஒப்புதல் அளிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2385/2020/எச்1

சு.பிரபாகரன்,
**ஆணையர் / தனிஅலுவலர்**
**திருவாரூர் நகராட்சி.**

இடம் : திருவாரூர்
நாள் : **08.11.2021**

பிலவ ஆண்டு (கார்த்திகை 14) 2021 நவம்பர் 30 தேதி செவ்வாய்கிழமை
முற்பகல் 11.00 மணிக்கு
திருவாரூர் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நடைபெறும் அப்பொழுது
கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்
முன்னிலை: திரு.சு.பிரபாகரன்ஆணையர் மற்றும் தனி அலுவலர்

| பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண் |
|---|---|
| பொருள் எண் 01<br>இந்நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் நவம்பர் 2021 மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம் | 299) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| பொருள் எண் 02<br>இந்நகராட்சி முன்னாள் உதவியாளர் திருமதி.G.ஆச்சியம்மாள் என்பவரால் ஓய்வூதியம் அனுமதிக்க கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் திருவாரூர் நகராட்சி ஆணையர் ஆகியோரை பிரதிவாதிகளா சேர்த்து WP.NO:1777/2019 என வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் திரு.P.சீனிவாஸ் என்பவரை நகராட்சி சார்பாக ஆஜராகவும் , வழக்கு செலவினம் ரூ.25,000/-க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்<br>2. வழக்கின் அவசரம் கருதி வழக்கறிஞர் திரு.P.சீனிவாஸ் என்பவரிடம் வழக்கினை ஒப்படைத்த அலுவலுக நடைமுறைக்கும் ஒப்புதல் வழங்கலாம்.<br>ந.க.எண் 818/2020/எப்1 | 300) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண் 03<br>திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட நல்லப்பா நகர் பகுதியில் அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடம் நகராட்சியால் பூட்டி சீல் வைக்கப்பட்டதை தொடர்ந்து அவ்விடத்தை கிரயம் பெற்ற திருமதி.A.கலா என்பரால் சீலினை அகற்ற கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் WP.No.25484/2021 என வழக்கு தொடரப்பட்டுள்ளதால் இவ்வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.பி.சீனிவாஸ் என்பவர் ஆஜராகவும், வழக்கு செலவினம் ரூ.25,000/-க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண் 818/2020/எப்1 | 301) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண் 04<br>தேர்தல் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தம் - 2022 –க்கான சிறப்பு முகாம்கள் (13.11.2021, 14.11.2021) (20.11.2021, 21.11.2021) மற்றும் (27.11.2021, 28.11.2021) ஆகிய சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் அனைத்து வாக்குசாவடிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் நீக்கல் திருத்தம் ஆகியவற்றிற்கான விண்ணப்பங்கள் பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்கான SVEEP ACTIVITIES மூலம் நமது நகராட்சி பகுதியில் போஸ்டர்ஸ், பேனர்ஸ், துண்டு பிரச்சாரம் BOV மூலம் ANNOUNCEMENT ஆகியவற்றை செய்யகோரி 11.11.2021 தேதிய மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க.எண் 8677/2020/உ3 மூலமும் 12.11.2021 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் அவர்களின் கூட்டத்தின் வாயிலாகவும் தெரிவித்துள்ளமையால் படிவங்கள் ஏற்றுவதற்கான செலவினம் மற்றும் SVEEP ACTIVITIES மேற்கொள்வதற்கான செலவினம் மற்றும் வாக்காளர் தினம் நிகழ்ச்சிக்கான செலவவினம் போன்றவை மேற்கொள்ள வேண்டி இருப்பதால் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.60,000/- மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : - 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 3488/2019/அ3 | 302) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண் 05<br>திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் நோய் பரவுவதை தடுத்திடும் பொருட்டு பராமரிப்பு களப்பணிக்காக 300 வீடுகளுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் பணியமர்த்தி கொள்ள தலைமை செயலர் அவர்களின் அறிவுரை DO LETTER NO 34408/D1/2019-1 நாள் 10.07.2020 நகராட்சி நிரிவாக ஆணையர் சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரை நாள் 06.03.2020 திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந.க.எண் 5403/2019/சி2 வளர்ச்சி நாள் 04.11.2019 மற்றும் நகராட்சி நிரிவாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் கடித ந.க.எண் 1256/2020/அ3 நாள் 10.07.2020 தேதிய கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளதன் பேரில் நகர் மன்ற தீர்மான எண் 246 நாள் 27.08.2021 அனுமதி பெறப்பட்டதன் அடிப்படையில் 51 பணியாளர்களை 4 மாத காலத்திற்கு பணிமேற்கொள்ள SARAM ENVIRO PVT LTD என்ற நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கப்பட்ட நிலையில் மேற்படி பணிகாலம் முடிவடைவதால் இந்நகர் தீர்மான எண் 174 நாள் 31.05.2021-ல் டெங்கு தடுப்பு பணிக்காக தற்காலிக பணியாளர்களை நியமிக்க ரூ.70 இலட்சம் மன்ற அனுமதி பெற்றுள்ளதால் இயற்கை இடர்பாடுகளால் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத காரணத்தினால் பொதுசுகாதார நலன் கருதியும் பணியின் அவசர அவசியம் கருதியும் தொடர் வடகிழக்கு பருவமழை பொழிந்து வருவதால் பணி காலத்தினை 01.12.2021 முதல் 28.02.2022 வரை கால நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள மேற்படி பணியினை ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதிய விலை விகித அடிப்படையில் ஊதியம் வழங்கவும் உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்ககப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதிய விகிதத்தின் அப்படையில் ஊதியம் வழங்கவும் 01.12.2021 முதல் 28.02.2022 வரை பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதி | 303) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| வழங்கலாம்.<br>ந.க.எண்:2258/2020/எச்1 | |
| பொருள் எண் 06<br>திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட ஸ்ரீதேவி நகர் வார்டு – 1, பிளாக் – 3, நகரளவு எண் 93/3-ல் ATL Telecom Infrastructure Pvt Ltd நிறுவனத்தின் செல்போன் உயர் கோபுரம் அமைக்கப்படுவதை எதிர்த்து 1) முதன்மை செயலாளர், தகவல் தொழில் நுட்ப துறை, சென்னை, 2) மாவட்ட ஆட்சியர், திருவாரூர், 3) ஆணையர், திருவாரூர் நகராட்சி, 4) வருவாய் கோட்டாச்சியர், திருவாரூர் மற்றும் 5) ATL Telecom Infrastructure Pvt Ltd ஆகியோரை பிரதிவாதிகளாக சேர்த்து திரு.எம்.ராஜு உள்ளிட்ட 5 நபர்களால் சென்னை உயர்நீதி மன்றத்தில் WP.No 32570/2019 என வழக்கு தொடரப்பட்டுள்ளதால் இவ்வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.பி.சீனிவாஸ் என்பவர் ஆஜராகிடவும் வழக்கு செலவினம் ரூ.25,000/-க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண் 208/2020/எப்1 | 304) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண் 07<br>திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண்.TN50 F 6520 இயங்கி வந்த வேலையில் எதிர்பாராத விதமாக 08.11.2021 அன்று பழுது ஏற்பட்டு விட்டபடியால் அதனை உடன் சீர்செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்கப்பட்டு மிககனமழை செய்து வருவதால் ஆங்காங்கே உள்ள குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் தேங்காத வண்ணம் பணிகள் மேற்கொள்ப்பபட்டு வருதனை ஆய்வு பணிகள் மேற்கொள்ளபப்பட்டு வருகிறது. இத்தருணத்தில் ஈப்பு வாகனம் மிகவும் அவசியமாக உள்ளதால் எதிர்பாதாத விதமாக ஏற்பட்ட பழுதினை உடன் சீர்செய்யவும் அவசர அவசியத்தினை கருத்தில்கொண்டு உள்ளூர்பணிமனைதாரர்களின் விலைப்புள்ளியினை பெறப்பட்டதில் குறைந்த விலைடப்புள்ளி அளித்துள்ள "ஞானம் ஆட்டோ காரேஜ், திருவாரூர்" என்பவரால் வழங்கப்பட்ட குறைந்த விலைப்புள்ளித தொகை ரூ.26850/- என ஏற்கப்பட்டும் மற்றும் பணியினை உடனடியாக மேற்கொள்ள சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணியினை மேற்கொள்ளப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>ந.க.எண்.3183/2021/இ1 | 305) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண் 08<br>திருவாரூர் நகராட்சியின் அலுவலக வளாகத்தில் செயல்பட்டுவரும் நுண்ணுயிரி உரமாக்கும் மையத்தில் இயங்கி வந்த இயந்திரங்கள் எதிர்பாராத விதமாக பழுது ஏற்பட்டு விட்டபடியால் அதனை உடன் சீர்செய்துதர துப்புரவு ஆய்வாளரின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து உள்ளூர் பணிமனைதாரர்களை அணுகி மேற்படி இயந்திரத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை ஸ்தல ஆய்வு விலைப்புள்ளி நேரடியாக வழங்க கோரப்பட்டது. அவ்வாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள "திரு.K.கண்ணன், JK Engineering Works. திருவாரூர்" என்பவரின் மூலம் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் உடன் பணியினை மேற்கொண்டு பயன்பாட்டிற்கு கொண்டு வர வேலை உத்தரவும் வழங்கப்பட்டடுள்ளது. மேலும் தற்போது பழுது சீர்செய்யும் பணியானது முழுமையாக முடிக்கப்பட்ட விபரத்தினையும் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு :-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு "தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ்" உடன் பணியினை மேற்கொள்ளப்பட்டதனையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>3. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தையும் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். | 306) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண் 09<br>திருவாரூர் நகராட்சி ஆணையர் மற்றும் மாவட்ட காவல் துணைகண்காணிப்பாளர் அவர்கள் 20.11..2021 அன்றைய நேராய்வில் கமலாலய குளக்கரையில் சேதம் குறித்து பார்வையிட்டு, ஆய்வு செய்து ஆணையரிடம் அலுவலக வளாகத்தில் உள்ள அரண்மனை சுற்றுச்சுவரை உடனடியாக இடித்து அப்புறப்படுத்த கோரியுள்ளார். எனவே சுற்றுச்சுவர் சாலைப்பகுதியில் விரிசல் ஏற்பட்டு விழும் நிலையில் உள்ளது. தற்போது செய்த பெருமழையின் காரணமாக கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளது. 'வடகிழக்கு பருவமழையின் காரணமாக அபாயகரமாகவும் பொதுமக்களுக்கு ஆபத்து விளைவிப்பதாகவும் உள்ளது. எனவே இரண்டு தினங்களுக்குள் சுற்றுச்சுவரை இடித்து அப்புறப்படுத்த பொறியாளருக்கு குறிப்பு வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்படி பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடத்தினை இடித்து உடனடியாக அப்புறப்படுத்திட அறிவுறுத்தப்பட்டதனை தொடர்ந்து தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் போர்கால அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக இந்நகராட்சி ஒப்பந்ததாரர்களிடம் நேரடியாக விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.தணிகாசலம் அவர்களின் விலைப்புள்ளி ஏற்கப்பட்டு பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு உடன் பணியினை மேற்கொள்ள வேலை உத்தரவு | 307) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணியினை மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண் 10

திருவாரூர் நகராட்சி அலவலக வளாகத்தில் உள்ள கழிவறைகளை பராமரித்தல், வெளிபுறபாதையில் பேவர் பிளாக் அமைத்தல் மற்றும் இதரப்பணிகள் மேற்கொள்ள இந்நகர் மன்றத்தீர்மானம் எண்.279 நாள்.29.10.2021ல் அனுமதி அளிக்கப்பட்டதனை தொடர்ந்து 18.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர்களின் விபரம் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | திரு.கே.செந்தில் குமார், 99.துர்காலயா ரோடு, திருவாரூர். | ரூ.361948.08/- | ரூ.366567/- | 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.எஸ்.தணிகாசலம், 16, பஜனை மடத்தெரு, மடப்புரம், திருவாரூர். | | ரூ.361600.30/- | 1.37% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளையும் ஒப்புநோக்கு பட்டியலின்படி இணக்கம் செய்யப்பட்டதில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.தணிகாசலம் ஒப்பந்ததாரர், திருவாரூர், என்பவரின் 0.10% சதவிகிதத்தினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள "திரு.எஸ்.தணிகாசலம், ஒப்பந்ததாரர், திருவாரூர் " என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

308) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 11

திருவாரூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.24ல் உள்ள பயணிகள் நிழற் கூரை முற்றிலும் சேதமடைந்து பயணிகளுக்கு பெரிதும் இடையூராக இருந்ததால் பொதுமக்களிடம் இருந்து பல்வேறு புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. எனவே அதனை இடித்து அப்புறப்படுத்திவிட்டு அதே இடத்தில் புதிதாக நிழற்கூரை அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்திற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

309) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 12

திருவாரூர் நகராட்சி தலைமை அலுவலக தரைத்தளத்தில் இயக்கி வந்த பொதுப்பிரிவு பகுதியினை மராமத்து பணிகள் மேற்கொண்டு விரைவில் நடைபெற இருக்கும் உள்ளாட்சி தேர்தலை கருத்தில் கொண்டு நகர்மன்ற கூடம் புதிதாக சீரமைக்க வேண்டியுள்ளதால் தயாரிக்கப்பட்ட உத்தேச செலவுத் தொகை ரூபாய்.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

310) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 13

திருவாரூர் நகராட்சி தலைமை அலவலகத்தில் இயங்கி வந்த பொது சுகாதாரம் மற்றும், வருவாய் துறையை அலுவலக முதல் தள கட்டிடத்தில் இயங்குவதற்கு வசதியாக மராமத்து பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவுத்தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

311) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

பொருள் எண் 14

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் 2021-22ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாகத் துறை மான்ய கோரிக்கையின் போது திருவாரூர், கரூர் நகராட்சிகளில் ரூ.151.00 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21329/2021/டபிள்யுபி நாள்.09.09.2021ல் திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் அபிவிருத்தி திட்டபணிகள் மேற்கொள்ளும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை மற்றும் கருத்துருக்கள் கோரப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து TUFISL சென்னை நிறுவனத்தின் மூலம் PBS கன்சல்டன்சி சர்வீஸ், ஹைதராபாத் என்ற ஆலோசனை நிறுவனத்தின் மூலம் 2016ம் ஆண்டில் மதிப்பீடு ரூ.69.00 கோடிக்கு தயார் செய்து TUFISL, சென்னை நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே நேரடியாக மேற்படி ஆலோசனை நிறுவனமான PBS Consultancy, Hyderabad என்ற நிறுவனத்திற்கு தொடர்பு கொண்டு அளித்த மதிப்பீடு தொகை தற்சமயம் உள்ள விலை விகித அடிப்படையில் தயார் செய்து வழங்க கோரப்பட்டதில் தங்களால் தற்சமயம் வழங்க இயலாது என தெரிவித்துவிட்டனர். அதன் அடிப்படையில் புதிய ஆலோசனை நிறுவனத்தை தேர்ந்தெடுத்து மதிப்பீடு விலை தற்சமயம் உள்ள விலை விகிதத்திற்கு தயார் செய்து வழங்க உரிய நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்று தருவரதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.4.50. இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி திட்டப்பணிக்கான ஆலோசனை மற்றும் உரிய ஆவணங்களுக்கு உரிய செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.485/2016/இ1

312) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 15

திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள ஜெனரேட்டர் அறையினை பழுது நீக்கம் செய்யும் பணியினை மேற்கொள் இந்நகர் மன்றத்தீர்மானம் எண்.280 நாள்.29.10.2020ல் அனுமதி அளிக்கப்பட்டதனை தொடர்ந்து 18.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர்களின் விபரம் | மதிப்பீட்டின் படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட ஒப்பந்ததப்புள்ளி தொகை ரூ. | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | திரு.கே.செந்தில் குமார், 99.துர்காலயா ரோடு, திருவாரூர். | ரூ.340810.64/- | ரூ.343257/- | 0.72% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம். |
| 2. | திரு.எஸ்.தணிகாசலம், 16,பஜனை மடத்தெரு, மடப்புரம், திருவாரூர். | | ரூ.340518.59/- | 0.09% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு. |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளையும் ஒப்புநோக்கு பட்டியலின்படி இணைக்கம் செய்யப்பட்டதில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.தணிகாசலம் ஒப்பந்ததாரர், திருவாரூர் என்பவரின் 0.09% சதவிகிதத்தினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.தணிகாசலம் ஒப்பந்ததாரர், திருவாரூர் என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

313) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 16

திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் இயங்கி வரும் பாய்லர், பிரிட்ஜ், அடுப்படி தரைத்தளம் ஆகியவை மிகவும் பழுதாகி இயக்க இயலாத நிலையில் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் உணவகத்தினை ஸ்தல ஆய்வு செய்து தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.6.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.3165/2021/இ1

314) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

| | |
|---|---|
| பொருள் எண் 17<br>திருவாரூர் நகராட்சியில் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் தர்ம கோவில் தெருவில் கட்டப்பட்டுள்ள வீடற்றோர் மற்றும் தனிமையில் விடப்பட்டவர்கள் தங்குவதற்காக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தில் வீடற்றோர் மற்றும் தனிமையில் விடப்பட்டவர்கள் தினசரி தங்கி வருபவர்களை Virtue தொண்டு நிறுவனத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி கட்டிடத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர் செய்து தர கோரி தொண்டு நிறுவனத்தால் கேட்டுகொள்ளப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்படி கட்டிடத்தினை ஸ்தல ஆய்வு செய்து தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.6.96 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்காணும் கட்டிட பராமரிப்பு பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 3182/2021/இ1 | 315) அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

சு.பிரபாகரன்,

இடம் : திருவாரூர்

நாள் : **30.11.2021**

**ஆணையர் / தனிஅலுவலர்**

**திருவாரூர் நகராட்சி.**